

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

RHODE ISLAND TAMIL SCHOOL

ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

**பொருள்:**

எந்த அறத்தை மறந்தார்க்கும் வாழ்வு உண்டு;
ஆனால் ஒருவர் செய்த உதவியை
மறந்தார்க்கு வாழ்வில்லை.

**He who has forgotten any virtue has life, but there is no life for those who forget the help they received**

# ஏப்ரல் செய்திமடல்

## பள்ளியின் அறிவிப்புகள் !!

1. ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி ஆண்டு விழா போட்டிகள் மே 3 மற்றும் மே 4 ஆம் தேதிகளில் நடைபெற உள்ளன.

2. மே 3ஆம் தேதி போட்டிகளுக்கு உங்கள் தமிழ் வகுப்பு ஆசிரியர்களை அணுகவும்.

3. மே 4ஆம் தேதி போட்டிகள் பள்ளி வளாகத்தில் நடைபெறும், போட்டிகளில் பங்கேற்க ஏப்ரல் 24 ஆம் தேதிக்கு முன்னர் பதிவு செய்யவும்.

4. 3வது பருவ தேர்வுகள் மே 17 ஆம் தேதி நடைபெற உள்ளது.

## பள்ளி அட்டவணை

| | | |
|---|---|---|
| 5/3/2024 | 35 | School Day 26 |
| 5/10/2024 | 36 | School Day 27 |
| 5/17/2024 | 37 | School Day 28 - 3rd Term Exam / IN PERSON |
| 5/24/2024 | 38 | Memorial Day |
| 5/31/2024 | 39 | Annual day planning/rehersal |

**இணைப்புக் கண்ணி**

http://tamilschoolcalendar/

## முத்தமிழ் முத்துக்கள்

### நாடகத்தமிழ்



நாடகம் தொன்மையும், தனிச்சிறப்பும் வாய்ந்ததாகும். நாடகம் என்பது, 'இயல்', 'இசை' மற்றும் உடல் அசைவுகளை அடிப்படையாகக் கொண்ட கதையைத் தழுவி நடித்துக்காட்டப்படுவதாகும்.

எட்டு வகையான உணர்ச்சிகளை ஒருவர் தம் மெய்ப்பாடு தோன்ற நடிப்பது நாடகத்தின் தனிச்சிறப்பாகும்.


இசையும் இயலும் செவிக்குத்தான் இன்பந் தருவனவாகும். நாடகமோ செவிகளுக்கும்,கண்களுக்கும் இன்பம் தரும் வண்ணம் படைத்ததாகும்.

அக்காலத்தில் தமிழ்நாடகங்கள் தெருக்கூத்துகளாக இருந்து, மேடை நாடகங்களாக மாறி, இலக்கிய நாடகங்களாக மலர்ச்சி பெற்று , இன்று அதிகமான தொழில்நுட்பங்களோடு திரைப்படங்களாக வருகின்றன.

படிக்காத பாமரர்க்கும், நேரமில்லாத படித்தவர்க்கும், நல்லறிவும் இன்பமும் பயத்தற்பொருட்டுப் பயன்படுவது நாடகத்தமிழாகும்.

வெளியே இருக்கும் வண்ண மீன்களில் ஒன்று தொட்டிக்குள்ளே குறையுது.

அதைக் கண்டுபிடிச்சு சரியாக வண்ணம் தீட்டி தொட்டியிலே விடுங்க!




## அம்மாவுக்கு ஆப்பிள் !!



ஒரு அன்பான சிறுமி தன் கைகளில் இரண்டு ஆப்பிள்களை வைத்திருந்தாள்.

அங்கு வந்த அவளின் தாய், நீ இரண்டு ஆப்பிள்கள் வைத்திருக்கிறாய், எனக்கு ஒன்று தருகிறாயா என்று கேட்டாள்.



தன் தாயை ஒரு வினாடி பார்த்த அந்த சிறுமி, பின் உடனே ஒரு ஆப்பிளை கடித்தாள்.

பின்பு உடனே இரண்டாவது ஆப்பிளையும் கடித்து விட்டாள். தாயின் முகத்தில் இருந்த சிரிப்பு உறைந்து போனது.



தன் ஏமாற்றத்தை வெளிப்படுத்தமுடியாமல் தவித்தாள்.

உடனே அந்தச் சிறுமி, தாயிடம் 'அம்மா இந்த ஆப்பிள்தான் இனிப்பாக இருக்கு; நீ இதை எடுத்துக்க' என்று சொன்னாள்.



**நீதி:**

நீங்கள் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். உங்கள் அனுபவம் எவ்வளவாகவும் இருக்கலாம். அறிவு விஸ்தீரணமாகவும் இருக்கலாம். ஆனால் ஒருவரைப்பற்றி கணிப்பதை சற்று தள்ளிப்போட்டு கணிக்கவும்.

## நினைவு நாளேடு

### தமிழ் புத்தாண்டு!

தமிழ் புத்தாண்டு என்பது தமிழ்நாட்டில் கொண்டாடப்படும் முக்கியமான பண்டிகைகளில் ஒன்றாகும். இந்த விழா தமிழ் சூரிய நாட்காட்டியின் சித்திரை மாதத்தின் முதல் நாளில், உலகெங்கிலும் உள்ள தமிழர்களால் ஆண்டுதோறும் ஏப்ரல் 14ஆம் தேதி மிகுந்த மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் கொண்டாடப்படுகிறது


### புவி தினம்!

புவி தினம் என்பது சுற்றுச்சூழல் இயக்கத்தின் சாதனைகளை கௌரவிக்கவும் மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக பூமியின் இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு வருடாந்திர கொண்டாட்டமாகும். 2024 ஆம் ஆண்டின் அதிகாரப்பூர்வ கருபொருள் "பிளானட் வெர்சஸ். பிளாஸ்டிக்" ஆகும்.

## நிகழ்வு நாளேடு

### நாடாளுமன்றத் தேர்தல் !

இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் ஏப்ரல் 19ஆம் தேதி தொடங்குகிறது. ஏறக்குறைய நூறு கோடி வாக்காளர்களுடன், இந்தியாவின் தேர்தல்கள் பெரும்பாலும் உலகின் மிகப்பெரிய ஜனநாயகப் பயிற்சியாக விவரிக்கப்படுகின்றன. இந்தியாவில் யூனியன் மற்றும் மாநில தேர்தல் செயல்முறைகளைக் கண்காணித்து நிர்வகிப்பதற்கு, இந்திய தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது. எந்தவொரு பாரபட்சமும் இல்லாமல், சுதந்திரமாகவும், நியாயமாகவும் தேர்தல் நடைபெறுவதை உறுதிசெய்யும் பொறுப்பு தேர்தல் ஆணையத்துக்கு உள்ளது.



பொறுமையும்,
விடாமுயற்சியும்
மலைகளைக் கூட
தகர்த்து விடும்.


-மகாத்மா காந்தி

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# ஏப்ரல் செய்திமடல்

வெற்றியின்
உண்மையான ரகசியம்,
எடுத்த காரியத்தில்
உறுதியாக நிற்பதே

- பெஞ்சமின் டிஸ்ரேலி



## ஆசிரியர் படைப்பு !

**வசந்த காலம் (spring season)**

உறைப்பனி
உறைந்த நதி
உதிர்ந்த இலைகள்
உதிரம் உறைய வைக்கும் குளிர்
ஊரோ வண்ணமற்ற வெண்ணிறம்

என்று தொடங்கும் வசந்த காலம்?

உதித்தது வசந்த காலம்
உருகும் வெண்பனி
உள்ளமோ உற்சாகம்
உள்ளாசமாய் ஊர்சுற்றும் பிள்ளை
ஊதா நிறப்பூக்கள்
உளமார வாழ்த்தியதோ இயற்கை!
உணர்தேன் இதுவும் கடந்து போகும்.

ஆனாலும்,

உள்ளம் கேட்குமே மோர்! (more)
-நீடிக்காதோ இந்த வசந்த காலம்

தீபாபிரியா செல்வராஜ்
நிலை - 3 ஆசிரியை

## பள்ளிக் கண்மணிகளின் கைவண்ணங்கள் !



மதுமதி
நிலை - 3



அக்க்ஷரா சாய் விக்னேஷ்
நிலை - 1



விஹாணா சந்துரு
நிலை - 1




சஞ்ஜித்கிருஷ்ணா சுப்பிரமணியன்
நிலை - 1

## புள்ளிகளை இணைத்து படத்தை முழுமையாக்கி வண்ணம் தீட்டி மகிழுங்கள்!





நேரம் தவறாமை
என்னும் கருவியை
உபயோகிப்பவர் என்றும்
கதாநாயகன் தான்



– முன்னாள் முதல்வர் காமராஜர்

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# ஏப்ரல் செய்திமடல்



சொல்வது தெளிந்து சொல்
செய்வது துணிந்து செய்

மகாகவி பாரதியார்

## குறுக்கெழுத்து போட்டி




**மேலிருந்து கீழ்:**

1. ஊட்டியை இப்படியும் பெருமையாகச் சொல்வார்கள் (5,3)
2. வெயிலா மழையா புயலா என்று நமக்கு இப்படிச் சொல்வார்கள் (3, 4)
3. துணியையும் காகிதத்தையும் வெட்டப் பயன்படும் (7)
5. மாமிசம் உண்ணாதவர்களை இப்படியும் சொல்லலாம் (3)
8. தமிழில் 247 இருக்கிறது (4)
10. இளைய சகோதரன் (3)
12. உலகம் (2)

**இடமிருந்து வலம்:**


1. தேசிய பறவை வண்டி ஏறி வருகிறது (3, 4)
4. கடற்கரையில் ஒன்றின் பின் ஒன்றாக வந்துகொண்டே இருக்கிறது இந்த channel (5)
6. அழகு குறைந்தபோதும் அறிவழகன் மூளைக்காரன் (3)
7. குழு அமைத்து உடுத்திக்கொள் (2)
9. சோப்பு கொண்டு அடிக்கடி இப்படிச் செய்தல் கிருமிகளை நீக்கும் (1,5)
11. சிலம்பு தேய்ந்து சிலம்பரசன் ஆகிவிட்டது (3)
13. பொருளின் மதிப்பு (2)
14. படத்தில் இருக்கும் பூச்சியின் பெயர் (3)

## செய்து பாருங்கள்

### புலி



1.சதுரமான காகிதத்தை எடுத்துக் கொள்ளவும்.
2.அக்காகிதத்தை முக்கோண வடிவத்திற்கு மடிக்கவும்.
3.முக்கோணத்தின் இரண்டு கூரான பக்கங்களை கீழ்புறமாக மடிக்கவும்.
4.மடிக்கப்பட்ட பக்கத்தினை மேல்புறமாக மடிக்கவும்.
5. அம்புக்குறியிட்ட பக்கங்களை மடித்துத் திருப்பவும்.
6. கீழ் உள்ள இரண்டு பகுதியினை உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் மடிக்கவும்.
7. புலியின் வாய், மூக்கு மற்றும் கண்களை வரையவும்.




## கண்டுப்பிடியுங்கள் !



## மார்ச் விளையாட்டுப் போட்டிகளின் விடைகள்!

**குறுக்கெழுத்து போட்டி**

மேலிருந்து கீழ்
1. மரம்
2. சட்டை
3. ஒட்டகம்
6. பாகற்காய்
9. பசு

வலமிருந்து இடம்
6. கழுதை

கீழிருந்து மேல்
5. தம்பி
10. குதிரை
11. பல்லி

இடமிருந்து வலம்
1. மஞ்சள்
4. பட்டம்
8. நாற்காலி
9. படகு

**நிழல் உருவங்களுடன் பொருத்துங்கள்**

1 ஆ 2 இ 3 ஈ 4 உ 5 ஊ 6 அ

**கண்டுப்பிடியுங்கள் !**

உடை
உலகம்
உரம்
உகம்
உதரம்
உனி
உம்

## ஏப்ரல் மாதம் மலர்ந்த மொட்டுக்கள் :

ஏப்ரல் மாதத்தில் பிறந்தநாள் கொண்டாடும் நம் பள்ளி செல்வங்களுக்கு, இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!




- அஸ்விதா சசின்குமார்
- ஆண்ட்ரியா ரமேஷ்
- ஆஷ்னா ஆனந்த்
- சபரீஸ்வர் சுப்ரமணியன்
- சித்தார்த் வங்கரி
- சிவகார்த்திகேயன் சிவக்குமரன்
- சுபிக்ஷா ஏகப்பநாத்
- தாரா ஸ்ரீதர்
- வர்னிக்கா அருண் பிரபாகர்



## தன்னார்வ குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| தலைவர் | - திரு. கார்த்திக் பாலசுப்பிரமணியன் |
| செயலாளர் | -. திரு. விஜயகுமார் சபாபதி |
| பொருளாளர். | - திருமதி. சாருலதா ரவிஷங்கர் |
| முதல்வர் | - திருமதி. ரமா சுப்பிரமணியன் |
| நிர்வாகி | -. திருமதி. சத்யப்பிரியா மாணிக்கவாசகம் |
| குறைதீர்க்கும் குழு | - அரவிந்த் பழனிசுவாமி, உண்ணாமலை முருகப்பன், கவிதா முருகேசன் |
| பள்ளிக்குழு | - ஐடா மெர்லின் ராஜகுமார், கண்ணன் ராஜசிங்கம், காமேஸ்வரி ராஜாராம், நித்யா வடிவேலு, பவித்ரா இரத்தினவேல், பிரகாஷ் முத்தையன், பிரதீபா முருகன், மனோத் ராஜகோபால், விஜய் ராஜேந்திரன், ஜெப்ரி ஜெயசிங் |

உங்கள் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன:
கதைகள், கட்டுரைகள், வரைபடங்கள், விடுகதைகள், சிறு குறிப்புகள், குறுஞ்செய்திகள் போன்ற உங்கள் படைப்புகளை அடுத்த மாதம் 15-ஆம் தேதிக்குள் RITAMILSCHOOL@GMAIL.COM என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

FB LINK: HTTPS://WWW.FACEBOOK.COM/RITAMILSCHOOL